
https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

01ST OCTOBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 47



நான்கெழுத்து வேட்பாளர்

04



# ஒரு லட்சமாகக் குறையும் இராணுவம்

இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கையை 2030 ஆம் ஆண்டளவில் ஒரு லட்சமாகக் குறைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த தென்னகோன் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.


02

## மின் கட்டணம் 22 வீதத்தால் உயர்வு

மின்கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளது.
22 அல்லது 23 வீதத்தால் அதிகரிப்பதற்கு எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது என்று அந்த அமைச்சின் உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதோடு இணைந்ததாக எரிபொருட்களின் விலையும் விலை சூத்திரத்தின் அடிப்படையில் அதிகரிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஓரிரு வாரங்களில் இதற்கான அனுமதி அமைச்சரவையில் பெறப்படவுள்ளது.



## 2340 பட்டதாரிகள் சிறையில்

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடந்த வருடம் 2340 பட்டதாரிகள் சிறைத் தண்டனையை அனுபவித்தனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களுள் 41 பேர் பெண்கள்.

கடந்த மூன்று வருடங்களில் 2022ஆம் ஆண்டே அதிகமான பட்டதாரிகள் சிறை சென்றனர் என்று சிறைச்சாலை தகவல்கள் மேலும்

02

## மின் கட்டண அதிகரிப்பு மிகப்பெரிய அநியாயம்



மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் என்றும் அது மக்களுக்கு செய்யும் மிகப்பெரிய அநியாயம் என்றும் மொட்டு கட்சி எம்பி ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்:

மக்கள் எல்லா பக்கத்திலும் கஷ்டத்துக்கு உள்ளாகி இருக்கும் சந்தர்ப்பம் இது.
இந்த நிலையில் மின்கட்டணத்தை அதிகரிப்பது மக்களுக்கு செய்யும் மிகப்பெரிய அநியாயம்.

ஏற்கனவே

02



## இரு பாதாள குழுக்களின் பழிக்கு பழி

03

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன





ராதா கிருஷ்ணா



சீதா ராம்



ஸ்ரீ பாலாஜி



நரசிம்மர்

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும் இச்சேவையில் பங்கு பற்றி விரைவில் கும்பாபிஷேகம் செய்து பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்

ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே

+94 772288166 +94 112433325

188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13

E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk

ISKCON SRI LANKA

புது சுடர்
www.puthusudar.lk
2023 OCTOBER 01 - SUNDAY

# போதையில் இருந்து சிறுவர்களை பாதுகாப்பது எப்படி?

இன்று உலக சிறுவர் தினம். நாளைய உலகத்தின் எதிர்காலம் தங்கி இருப்பது இன்றைய சிறுவர்களின் கைகளில்தான்.அவர்களுக்கு நாம் இப்போது எதைக் கொடுக்கிறோமோ அதுதான் நாளை அறுவடையாகக் கிடைக்கும்.

இதை மனதில் வைத்துக்கொண்டே நாம் சிறுவர்களுக்கு எதை வழங்குவது என்று முடிவு செய்ய வேண்டும்.ஆரோக்கியமான உணவு-தரமான கல்வி-அறிவு-ஒழுக்கம் போன்றவற்றை வழங்குவதன்மூலம்தான் நல்லதொரு தலைமுறையைக் கட்டி எழுப்ப முடியும்.

அன்றுபோல் அல்ல இந்தக் காலம். பிள்ளைகளை வளர்ப்பதென்பது மிகவும் சவால்மிக்கது.கத்திமேல் நடப்பது போன்றது.

அந்த சவால்களில் ஒன்றுதான் இப்போது தலை விரித்தாடும் போதைப்பொருள் பாவனை. மிகப்பெரிய சவாலே அதுதான்.

போதைப்பொருள் விற்பனையாளர்கள் சிறுவர்களை-பாடசாலை மாணவர்களை குறி வைத்தே இந்த வர்த்தகத்தை நடத்துகின்றனர்.

சிறுவர்கள் பக்குவற்றமற்றவர்கள். நல்லது கெட்டது அறியாதவர்கள். கவர்ச்சியின் பக்கம் ஈர்க்கப்படக்கூடியவர்கள்.நண்பர்கள் எதைச் செய்கிறார்களோ அதையே தாமும் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள்.

பின்விளைவு -முன் விளைவு என எதுவும் அறியாதவர்கள்.இதைத்தான் இளங்கன்று பயமறியாது என்று எம் முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளார்கள்.

போதைப்பொருள் பாவனையில் இருந்து இவர்களை பாதுகாக்கும் செயற்பாடு வீட்டுச் சூழலில் இருந்தும் பாடசாலை சூழலில் இருந்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும். பெற்றோர்களும் பாடசாலை நிர்வாகமும் ஒன்றிணைந்தே இந்த நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

பிள்ளைகளின் நற்பு வட்டாரத்தை எப்போதும் அவதானித்துக்கொண்டே இருக்க வேண்டும்.புதிய நற்பு கிடைத்தாலோ அல்லது வயதில் பெரியவர்களின் நற்பு கிடைத்தாலோ உடனடியாக பெற்றோர்கள் விழிப்படைய வேண்டும். அவர்களைப்பற்றி உடன் ஆராய வேண்டும்.

பிள்ளைகள் வழமைக்கு மாறான செயற்பாடுகளை வெளிப்படுத்தினால் அதைக் கவனத்தில் எடுக்க வேண்டும். உணவில் -விளையாட்டில்-படிப்பில் நாட்டம் குறைவாக இருந்தால் அதை சாதாரணமாக எண்ணிவிடக்கூடாது.

அதுபோக ஊருக்குள் யாரெல்லாம் போதைப்பொருள் வியாபாரிகள் என்று அடையப்படுத்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள்மீதும் அவர்களுடன் நெருக்கமானவர்கள்மீது கவனம் செலுத்த வேண்டும்.அவர்கள் தம் பிள்ளைகளை அணுகுகிறார்களா என்று பார்க்க வேண்டும்.

பிள்ளைகளை அதிகமாக விளையாட்டுக்களிலும் சமய விடயங்களிலும் ஈடுபடுத்த வேண்டும். விளையாட்டில் முன்னுக்கு வரவேண்டுமென்றால் ஆரோக்கியம் முக்கியம்.அந்த ஆரோக்கியத்தை போதைப்பொருள் முற்றாகப் பாதித்துவிடும் என்ற அறிவு பிள்ளைகளுக்கு வந்துவிடும்.

அதேபோல் சமய பிரசாரங்களும் போதைப்பொருள் பாவனையில் இருந்து தடுக்கும்.இவை இரண்டிலும் ஈடுபட்டும்கூட போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுகின்ற பிள்ளைகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதனால் எதைச் செய்தாலும் கண்காணிப்பு என்பது இதில் முக்கியமாகிறது.

பாதுகாப்பது அரணை ஏற்படுத்திவிட்டு பெற்றோர்கள் சும்மா இருக்கக்கூடாது.தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம்.

என்னதான் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தாலும் அதையெல்லாம் உடைத்துக்கொண்டு வெளியே எடுக்கும் வேலையைக் கட்சிதமாகச் செய்வார்கள் போதைப்பொருள் வியாபாரிகள்.

வீட்டு சூழலில்போல் பாடசாலை சூழலும் போதைத் தடுப்புக்கு முக்கியமானது.இந்த இரண்டு சூழல்களும் ஒன்றிணைந்தால் மாத்திரமே போதையில் இருந்து எம் சிறுவர்களை பாதுகாக்க முடியும்.



உலக நீர் வெறுப்பு நோய் தினம் செப்டம்பர் 28 ஆகும். இதனையொட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை க்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் தொற்று நோய் பிரிவு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணைந்து நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு அமைவாக இன்று காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. (நூருல் ஹுதா உமர்)

## 2,340...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதேபோல் கடந்த வருடம் கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் 8420 பேரும் சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்கள் 7178 பேரும் சிறைத்தண்டனை அனுபவித்தனர் என்று அந்தத் தகவல் மேலும் தெரிவிக்கிறது.

மொத்த சிறைக்கைதிகளில் பாடசாலை செல்லாதவர்களே அதிகம் என்று மேலும் கூறுகிறது அந்தத் தகவல்.

## மின் கட்டண...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதிகரிக்கப்பட்ட கட்டணத்தால் மக்கள் கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். அதைக் குறைக்க வேண்டிய நிலையில் மீண்டும் கூடுவது எந்தவகையில் நியாயம்?

இது தொடர்பில் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடும் சந்தகமாகவுள்ளது.கட்டண அதிகரிப்பை உடன் நிறுத்த வேண்டும்.என்றார்.

## ஒரு லட்சமாகக்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இப்போது இராணுவத்தின் எண்ணிக்கை இரண்டு லட்சத்தைத் தாண்டியுள்ளது.அந்த எண்ணிக்கையில் இருந்து ஒரு லட்சம் பேரைக் குறைப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

யுத்தம் இல்லாத நிலையில் 2 லட்சம் என்பது அதிக எண்ணிக்கை என்று அரசு கருதியே இந்தக் குறைப்பை மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளார்.

இதேபோல் கடற்படை மற்றும் விமானப் படையின் எண்ணிக்கையையும் குறைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

சிவில் பாதுகாப்பு படையில் 33 ஆயிரம் பேர் உள்ளனர். அவர்களிலும் கணிசமான அளவு குறைக்கப்படவுள்ளது.









# இராஜாங்க அமைச்சரின் மாமாவின் கொலை:

# இரு பாதாள குழுக்களின் பழிக்கு பழி

பாதாள குழுவினர் இனி ஓர் உயிரைக்கூடப் பறிப்பதற்கு இடங்கொடுக்கமாட்டேன் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கூறி வாய் மூடவில்லை.

அதற்குள் அடுத்த கொலை.அதுவும் கொல்லப்பட்டவர் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் மாமா.

தெற்கில் இடம்பெற்று வரும் பாதாள குழுக்களின் அட்டகாசங்களின் உச்சக்கட்டமே இந்தப் படுகொலை.

அமைச்சர் டிரான் அலஸ் அவ்வாறு கூறியதில் இருந்து இதுவரை பல படுகொலை சம்பவங்கள் தெற்கிலும் மேல்மாகாணத்திலும் இடம்பெற்றுள்ளன.

இந்தப் படுகொலை தொடரில் ஒன்றுதான் கடந்த மாதம் 23ஆம் திகதி காலி நகரில் இடம்பெற்ற படுகொலை.

அதில் உயிரிழந்தவர் இராஜாங்க அமைச்சர் டி.வி.சாணக்கவின் மாமா.லலித் வசந்த.ஒரு வர்த்தகர்.

பூஸா பகுதியைச் சேர்ந்த அவர் வர்த்தக நோக்கிற்காக காலி நகரில் குடும்பத்தோடு குடியேறினார்.

வர்த்தகர்களுடனும் அரசியல்வாதிகளுடனும் நெருங்கிய உறவைக் கொண்டவர்.

ஓரிரு மாதங்களுக்கு முன்தான் அவரது மகள் இராஜாங்க அமைச்சர் டி.வி. சாணக்கவை மணந்துகொண்டார்.

23 ஆம் திகதி இரவு தனது வர்த்தக நிலையத்தில் இருந்து வீடு திரும்புகிறார் வசந்த.

ஒரு கிலோ மீற்றர் தூரம்கூடச் செல்லவில்லை.

இடைமறிக்கிறார்கள் இருவர்.மோட்டார் சைக்களில்...

அவர்கள் அவரது காரை பின் தொடர்ந்து வந்தவர்கள்.எதிர்பார்க்கவில்லை வசந்த.

வைத்துப் பிடிக்கிறான் மோட்டார் சைக்கிளில் பின் ஆசனத்தில் அமர்ந்திருப்பவன் .

ஆம் ....

சீறி பாய்கின்றன புல்லட்கள் டீ-56 துப்பாக்கியில் இருந்து.

புல்லட்கள் வசந்தவையும் பதம் பார்க்க... நிலை குலைகிறார் வசந்த.

ஓரமாகிறது கார்.

அப்போதும் விடவில்லை அவர்கள்.

மோட்டார் சைக்களில் இருந்து இறங்கி வந்து மீண்டும் வைத்துப் பிடிக்கிறான் அவன் வசந்தமீது...

வசந்த தப்பிவிடவே கூடாது என்பதற்காக...

உடனே..

தப்பிச் செல்கிறார்கள் அங்கிருந்து...

பல வெடில்கள் வசந்தமீது...

பிரிகிறது உயிர்.அந்த இடத்திலேயே...

பல இடங்களில் வெடில்கள்.தலை- நெஞ்சு-கை.இப்படி...

17 வெற்றுத் தோட்டாக்கள் கண்டெடுக்கப்படுகின்றன அங்கு.

இந்த தொழிலதிபருக்கு எதிராக எதுவித குற்றச்சாட்டுக்களும் இல்லை என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வருகிறது.

அப்படியென்றால்,ஏன் இவர் கொல்லப்பட வேண்டும் என்ற கேள்வி எழுகிறது.

இதே கேள்வியைத்தான் பொலிஸாரும் எழுப்புகின்றனர்.

அப்படியென்றால் தெற்கில் போதைப்பொருள் வர்த்தகத்தைக் கைப்பற்றுவதற்காக இடம்பெற்றுவரும் பாதாளா உலகக் குழுக்களுக்கிடையிலான மோதலின் விளைவாகவே இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகிக்கிறார்கள் பொலிஸார்.

கொலை செய்யப்பட இந்த வர்த்தகர் தெற்கில் பிரபல பாதாளக் குழு தலைவர் ரத்கம விதுரவின் நெருங்கிய உறவினராவார்.

விதுர இப்போது இத்தாலியில்.

பல குற்றச் செயல்களுடன் தொடர்புபட்ட விதுர அங்கிருந்து இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள செயற்பாட்டையும் முன்னெடுத்து வருகிறார்.



கொல்லப்பட்ட லலித் வசந்த மெண்டிஸ்



இராஜாங்க அமைச்சர் டி.வி,சாணக

வெளிநாடுகளில் இருந்து இயங்குகின்ற பல பாதாள உலக தலைவர்களைப்போல் விதுரவும் இங்கு அவரது அடியாட்களை வைத்து மேற்படி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார்.

இவரது முக்கிய எதிரி கொஸ்கொட சுஜீவ.சுஜி இருப்பது துபாயில்.

இவர்கள் இருவருக்குமிடையிலான சண்டை இன்று ,நேற்று தொடங்கியது அல்ல.நீண்ட கால சண்டை.

அந்த குழுக்களின் மோதலால் இரு தரப்பிலும் குறைந்தது 30 பேரளவில் கொல்லப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகப் போட்டியே இந்த சண்டைக்குக் காரணம்.

சுஜீயின் நெருக்கமானவர்களை -உறவினர்களை விதுர கொலை செய்வதாலும் விதுரவின் உறவினர்களை- நண்பர்களை சுஜீவ கொலை செய்வதாலும் இந்த வர்த்தகர் வசந்தவையும் சுஜீயே கொலை செய்திருப்பார் என்று சந்தேகிக்கிறார்கள் பொலிஸார்.

கடந்த மே 26 ஆம் திகதி அம்பலாங்கொட தர்மா அசோகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் மஹேஷ் டி சொய்சா சுடப்பட்டார்.

அவர் பாடசாலை விட்டு மோட்டார் சைக்களில் வீடு சென்றுகொண்டிருக்கும்போது இன்னொரு மோட்டார் சைக்களில் அவரைப் பின்தொடர்ந்து வந்த இருவர் ரன்தெம்பே பகுதியில் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

அவர் அதிலிருந்து தப்பி நேராக அம்பலாங்கொட பொலிஸ் நிலையம் சென்றார்.அதன்மூலம் அவர் உயிர் தப்பினார்.

அவர் கொஸ்கொட சுஜீயின் உறவினர். மச்சான்.

அந்தக் கொலை முயற்சியை மேற்கொண்டது ரத்தகம விதுர என்பது விசாரணையில் தெரிய வந்தது.

இதற்கு பழிவாங்கும் வகையில் ஜுன் மாதம் 12ஆம் திகதி இன்னொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெறுகிறது.

அது சீனிகம விகாரை பகுதியில்.

அந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் ரத்கம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் துலாஜ் தரங்க கமகே.

விதுரவின் மனைவியின் சகோதரர்.

அவரைக் கொல்வதற்கான திட்டத்தை வகுத்தவர் கொஸ்கொட சுஜி.

அந்த சம்பவத்தில் துலாஜ் காயமடைந்த நிலையில் அவரும் பொலிஸ் நிலையத்துக்குள் ஓடிச் சென்றுதான் உயிர் தப்புகிறார்.

பின்னர் பொலிஸ் பாதுகாப்புடன் வைத்தியசாலையில் சேர்க்கப்படுகிறார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டபோது அன்றைய தினம் ஹபராதுவ பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் ஒருவன் மாலைதீவுக்குத் தப்பிச் செல்கிறான்.அங்கிருந்து துபாய்க்கு.

இதற்கான ஏற்பாட்டைச் செய்தது கொஸ்கொட சுஜி.

அந்த இளைஞனை சந்திப்பதற்காக துலாஜ் சென்றபோதுதான் சுடப்பட்டார்.

துலாஜை அந்த இடத்துக்கு வரவைத்தவன் அந்த இளைஞன்தான்.

அவன் வரும்வரை துலாஜ் காத்திருக்கிறார் அவரது கெப் வாகனத்தில்.

அப்போது அங்கு மோட்டார் சைக்களில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று 10 நாட்களில் இன்னொரு கொலைச் சம்பவம்.

அது கொஸ்கொட ஹித்தருவ பகுதியில்.

கொல்லப்பட்டவர் கொஸ்கொட சுஜியின் மாமாவான கொஸ்கொட ரன் மஹத்தயா என்பவர்.

இந்தக் கொலையைப் புரிந்தவர்கள் ரத்தகம விதுரவின் அடி ஆட்கள் .

மேலும் சில நாட்களுக்கு முன் இன்னொரு கொலை.

ரத்தகம பகுதியில் கை,கால்கள் கட்டப்பட்ட நிலையில் 28 வயது இளைஞன் ஒருவன் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டான்.

அவன் கொஸ்கொட சுஜியின் அடி ஆள்.

அதன் தொடராகத்தான் வர்த்தகர் லலித் வசந்தவின் கொலையும் இடம்பெற்றிருக்கலாம் என்றும் அதை கொஸ்கொட சுஜியின் குழுவினரே செய்திருப்பர் என்றும் சந்தேகிக்கிறார்கள் பொலிஸார்.

இருந்தும்,கொலையாளியை கண்டுபிடிப்பதற்கான பொலிஸ் விசாரணை தொடர்கிறது.

- ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக் -



கொஸ்கொட சுஜி



# நான்கெழுத்து வேட்பாளர்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சி யாரை வேட்பாளராக நிறுத்தப்போகிறது என்று அறிவதற்கு அனைவரும் ஆர்வமாகவுள்ளனர்.

அந்த வேட்பாளர் யார் என்று மொட்டு கட்சி அண்மையில் துப்பு ஒன்றைக் கொடுத்திருந்தது.

அது மூன்றெழுத்தில் பெயர் வருகின்ற ஒருவரே வேட்பாளர் என்பதுதான் அந்த துப்பு.

அந்தத் துப்பை வைத்துக்கொண்டு அது பசிலாக இருக்கலாம் அல்லது நாமலாக இருக்கலாம் என்று பலரும் ஊகம் தெரிவித்து வருகின்றனர்.

உண்மையில் அந்த வேட்பாளரின் பெயர் மூன்றெழுத்தில் இல்லையாம். நான்கெழுத்தாம்.

அந்த மனிதருடன் பசில் ராஜபக்ச அடிக்கடி பேசி வருகிறாராம்.

# கோத்தாவின் ஆட்களுக்கு வலை






கோத்தாபய ராஜபக்ஸவை ஜனாதிபதியாக்குவதற்கான பிரசார வேலைகளை முன்னெடுத்துச் சென்றவர் தேரன தொலைக்காட்சியின் முதலாளி திலித் ஜெயவீர என்பதை எல்லோரும் அறிவார்கள்.

இப்போது திலித் ஜனாதிபதியாகும் ஆசையில் உள்ளார்.அதற்காக அவர் முன்னாள் அமைச்சர் ஹேமகுமார நாணயக்காரவின் கட்சியை வாங்கி இருக்கிறார்.

அடுத்து அப்போது கோத்தாவால் உருவாக்கப்பட்ட “வியத்மக“ என்ற புத்திஜீவிகள் அமைப்பை வளைத்துப் போடுவதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளாராம்.



# ஜனாதிபதி வேடத்தில் வந்தவர் யார்?

மாத்தறை மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் கடந்த வாரம் மாத்தறையில் இடம்பெற்றது.அந்தக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் ஒரு முக்கியஸ்தர் அழைக்கப்பட்டிருந்தார்.

கூட்டம் தொடங்குவதற்கு முன் கூட்டத்துக்கு வந்தவர்கள் அவரது வருகைக்காகக் காத்திருந்தனர்.

அப்போது அங்கு குண்டு துளைக்காத வாகனம் ஒன்று வந்து நின்றது.அதில் இருந்து ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் பெண் அதிகாரி ஒருவர் இறங்கினார்.

இறங்கியதும் அவர் அங்கும் இங்கும் நடமாடத் தொடங்கினார்.தடுமாறினார்.

அப்போது கூட்டத்திற்கு வந்தவர்கள் நினைத்தனர் முன்கூட்டி அறிவிக்காமல் ஜனாதிபதிதான் வரப்போகிறார் என்று.

அப்போது ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரின் பாதுகாப்போடு வாகன அணியொன்று வந்து நின்றது.

அதில் இருந்து ஒருவர் இறங்குவதற்குத் தயாரானார்.

ஜனாதிபதிதான் வருகிறார் என எல்லோரும் நினைத்துக்கொண்டு அவரை வரவேற்கத் தயாராகினர்.

அதில் இறங்கியது ஜனாதிபதியல்ல அவரது ஆலோசகர் சாகல ரத்நாயக்க.15 பேர்கொண்ட ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவோடு அங்கு வந்தவர் சாக்லதான்.

அவர்தான் கூட்டத்திற்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

எப்புடி வேல....

# ஐ.நாவுக்கான பயணத்தைக் தடுத்த சஜித்



ஐ.நா கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் நோக்கில் அங்கு செல்வதற்காக ஜனாதிபதி தயாரானபோது அவருடன் செல்வதற்கு எம்பிக்கள் கூட்டம் ஒன்றும் தயாரானது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மொனராகல மாவட்ட எம்பி டபிள்யு. எச்.எம்.தர்மசேனவும் அவர்களுள் ஒருவர்.

ரணிலுடன் செல்ல வேண்டாம் என்று சஜித் பிரேமதாசா கூறியபோது அதையெல்லாம் கேட்காமல் விமான டிக்கட் உட்பட பல ஏற்பாடுகளை அவர் செய்துவிட்டார்.

இறுதியில் சஜித் கொடுத்த கடும் அழுத்தம் காரணமாக அவர் பயணத்தை நிறுத்திக்கொண்டார்.

# நாமலை சுற்றிவளைத்த நாடாளுமன்ற ஊழியர்கள்



இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான ஆசிய கிண்ண கிரிக்கட் போட்டி நிறைவுபெற்று சில நாட்களில் நாமல் ராஜபக்ச நாடாளுமன்றில் இருந்தார்.

அப்போது நாடாளுமன்ற உணவகத்தில் இருந்து அவரது நண்பர்கள் அவருக்கு அவசர அவசரமாக தொலைபேசி அழைப்பை எடுத்து அங்கு உடனே வருமாறு கூறினர்.

உடனே அங்கு சென்றார் நாமல்.

அங்கு நாடாளுமன்ற ஊழியர்கள் சிலர் நாமலுக்காகக் காத்துக்கொண்டு நின்றனர். நாமல் சென்றது அவரை அந்த ஊழியர்கள் சுற்றிவளைத்துவிட்டனர்.

அதற்கு காரணம் அந்தப் போட்டியில் இலங்கை படுமோசமாகத் தோல்வியடைந்தமைக்கான காரணத்தைக் கேட்பதற்காக.

நாமல் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் என்பதால் அவர்கள் அவரிடம் வினவினர்.

முடியுமானவரை அவர்களுக்கு பதில் வழங்கினார் நாமல்.இருந்தும்,இலங்கை அணியை அவர் விட்டுக்கொடுக்கவில்லை.

# சின்ன மகன்



அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்காக மொட்டு கட்சியை இப்போதே பலப்படுத்தும் நோக்கில் அக்கட்சி நாடு பூராகவும் கூட்டங்களை நடத்தி வருகிறது.

அனைத்துக் கூட்டங்களிலும் நாமல் ராஜபக்ஸ கலந்துகொள்கிறார்.


சில நாட்களுக்கு முன் ஹம்பாந்தோட்டையில் பல இடங்களில் கூட்டங்கள் இடம்பெற்றன.

அந்தக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் அறிவிப்பாளர்கள் நாமலை கூறியது ““ சின்ன மகன் ““ என்றுதான்.

அதில் கலந்துகொண்ட சாகர காரியவசம் நாமலிடம் கேட்டார் ““ கொழும்பில் சின்ன சிங்கம்.ஊரில் சின்ன மகன் என““ என்று...

“ஓம் ஊர்ல நம்ம சின்ன மகன்தான் ““ என்று பதிலளித்தார் நாமல் சிரித்துக்கொண்டு...

# நான் பிச்சைக்காரன் அல்ல



தயாசிறி ஜயசேகரவை கட்சியில் இருந்தும் கட்சியின் செயலாளர் பதவியில் இருந்தும் நீக்குவதற்காக சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக சு.கவின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெற்ற அன்றைய தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளர் திலங்க சுமதிபால அவரது அலுவலகத்தை காலி செய்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அலுவலகமாக அது சு.க தலைமையகத்துக்குள்ளேயே இயங்கியது.

தயாசிரியை நீக்கியதன் காரணமாக கோபமடைந்த திலங்க அன்றைய தினமே அலுவலகத்தை காலி செய்தார்.

அவர் அலுவலகத்துக்குள் இருந்த பைல் உள்ளிட்ட பல பொருட்களை எடுத்துக்கொண்டிருக்கும்போது மைத்திரி அந்தக் கட்டத்தில் வேறு அறையில் இருந்தார்.

அலுவலகத்தைக் காலி செய்ய வேண்டாம் என்று அவர் ஒருவரிடம் தகவல் அனுப்பினார்.

கொழும்பில் அலுவலகம் ஒன்றை எடுக்க முடியாத அளவுக்கு நான் பிச்சைக்காரன் அல்ல என்று திலங்க பதில் கூறி அனுப்பினார் மைத்திரிக்கு.




# உலக சிறுவர் தினம் எதற்காக?



உலகில் மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழ வேண்டுமென்றால் அதற்கு மனித உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

அந்தவகையிலே சிறுபராயத்தில் வழங்கப்படும் பாதுகாப்பே அவர்களை எதிர்காலத்துக்கு உரியவர்களாக மாற்றுகின்றது.

சர்வதேச சிறுவர்கள் சாசனத்தின் முதலாவது சரத்தின்படி ஆண், பெண் வேறுபாடின்றி பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட எந்த ஒரு பிரஜையும் சிறுவர்களேயாவர்.

இன்று நாட்டின் முத்துக்களாக மிளிரும் சிறுவர்கள் நாட்டின் பெறுமதி மிக்க சொத்துக்களாவர். இத்தகைய சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்குடனும் அவர்களது உரிமையை பாதுகாக்கும் நோக்குடனும் அவர்களுக்கென்று ஓர் தினம் வகுக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது.

அத்தினம் தான் உலக சிறுவர் தினம் ஆகும். சர்வதேச சிறுவர் தினம் ஒக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது.

1954-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் தினம் சர்வதேச ரீதியாக கொண்டாட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.

இது 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி சர்வதேச ரீதியில் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமையவும் சிறப்பான சூழ்நிலை உருவாகவும் வேண்டுமானால் சிறுவர்களை சரியான தடத்தில் வழி நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். எதிர்கால உலகின் தலைவர்களாகவும் இந்த உலகைக் காப்பதற்கு தயாராகும் பாதுகாவலர்களாக இருப்பவர்கள் சிறுவர்களே.

எதிர்கால உலகின் சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய நற்பண்பும், அறிவும் நிறைந்த பலம்மிக்க பிள்ளையை நாட்டுக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு சிறுவர் தொடர்பான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றது.

காரணம் இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பது ஒவ்வொரு நாடும் உணர்ந்து இருப்பதேயாலாகும்.

சிறுவர்களுக்கென பல்வேறு உரிமைகள் ஒவ்வொரு நாடுகளிலும் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் உயிர் வாழ்வதற்கும், அபிவிருத்திக்குமான உரிமை, போதிய கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை, பெற்றோரைத் தெரிந்து கொள்வதற்கும் அவர்களுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் உரிமை, பாலியல் வன்புணர்வுகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை என பல உரிமைகள் சிறுவர்களுக்கு உண்டு.

சிறுவர்கள் முகங்கொடுத்து வருகின்ற சமகால அச்சுறுத்தல்களால் பெரும்பாலானவை அவர்களை உடல், உள, ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாக்குகின்றனர்.


சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கும் சம்பவங்கள் நடைபெறுகின்றன. சிறுவர்கள் எதிர்கொள்ளும் மிக மோசமான அச்சுறுத்தல்களில் இதுவும் ஒன்றாகும்.

பாடசாலைக்குச் செல்வதற்கும் கல்வியைத் தொடர்வதற்கும் தடையாக வறுமை அமைவதால் உலகில் பல சிறுவர்கள் கடைகள், சந்தைகள், வீடுகளில் பகுதி நேர வேலையாட்களாக இருந்து உழைத்துக் கல்வியைத் தொடர்கிறார்கள் மேலும் சிலர் கல்வி கற்பதை இடைநிறுத்தி வேலைக்குச் செல்கின்றனர்.

சிறார்களின் உரிமைகள் பேணப்பட்டு தேவைகள் நிறைவேற்றப்பட்டு உரிய முறையில் நடாத்தப்படும் போது மட்டுமே இவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும்.

எனவே இவர்களின் ஆளுமை, விழுமியங்கள் என்பவற்றிற்கு முன்னுரிமை கொடுக்கப்படல் அவசியம். இது சமூகத்தின் கடனாகும். சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களை நன்முறையில் வழிநடத்தி மகத்துவம் மிக்க சிறுவர் சமுதாயத்தை உருவாக்குவோமாக.

# பிழையான கல்வித் திட்டம்



அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்குவதற்கேற்ப சிறார்களின் கல்வியும் உயர்தரக் கல்வியும் மேற்படிப்புக் கல்வியும் அமைய வேண்டும்.

இன்றைய சிறார்கள் ஐந்தாம்தர (புத்து வயது) புலமைப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைவதற்காக ஒன்பதாம் தர மாகாணமட்டப் பரீட்சையில் சித்தியடைவதற்காக சாதாரணதர பரீட்சையில் சித்தியடைவதற்காக உயர்தரப் பரீட்சையில் முதனிலை சித்தியடைவதற்காக என பரீட்சையை இலக்காகக் கொண்டு கற்கும் வகையிலேயே இன்றைய கல்வியின் இருப்பு உள்ளது.

இன்றைய சிறார்கள் மூன்று வயதினிலே வெளியிடத்துக்குச் சென்று கல்வி பயில ஆரம்பிக்கின்றனர். சிறுவர்கள் இன்று வீட்டில் இருக்கும் நேரத்தை விட பாடசாலையில், கல்விச்சாலையில் பல மணித்தியாலங்களை கழிப்பவராகவேயுள்ளனர்.

தம் பிள்ளை முதனிலை அடைய வேண்டுமென்பதற்காக இன்றைய பெற்றோர்கள் சிறுவர்களின் மீது கல்வியினை திணிப்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

சொந்தப் பிள்ளையின் ஆற்றலை முதன்மைப்படுத்தி உற்சாக மூட்டாமல் வேறோரு பிள்ளையின் கல்வித் தரத்தை, உத்வேகத்தை ஒப்பீட்டு சிறார்களின் மனதை புண்படுத்துவது பெற்றோர்களின் சாதாரண வழக்கமாகிவிட்டது. இந்நிலை பாரதூரமானதாகும்.

ஐந்து வயதிற்கு முன் ஏற்படும் உளப்பதிவுகள் நாற்பது வயதிற்குப் பின்னரே தாக்கத்தை ஏற்படுத்தும் அளவு உளத்தாக்கங்களின் இருப்புக்கள் செல்வாக்கு செலுத்தும் இயலளவுடையனவாக அமைகின்றன.

நெருக்கீடுகளின் இருப்புகளால் ஏற்படும் தாக்கங்கள் மாணவர்களின் அறிவு,திறன்,ஆற்றல் என்பவற்றை மழுங்கடிக்கச் செய்துவிடுகின்றன. அவ்வேளைகளில் கற்ற கல்வியறிவும்,பெற்ற ஆற்றலும் பூச்சியமாகி விடுகின்றன.

இன்றைய சிறார்கள் கல்வி பயில செல்லும் பல இடங்களில் உளநெருக்கீடுகளுக்கு உட்படுகின்றனர்.

பெற்றோர்களின் கௌரவத்திற்காக பரீட்சையில் சித்தியடைவதற்காக அயராது படிப்பதோடு கல்வி பயில செல்லும் வழிகளில் கப்பம் பெறுவதற்காக கடத்தப்பட்டு வன்புணர்வின் பிற்பாடு உயிரை மாய்க்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இலங்கையின் பரீட்சை மையக் கல்வியானது சிறார்களை உளத்தாக்கத்துக்கு உட்படுத்துகின்றது என்றால் மிகையாகாது.இலங்கையிலுள்ள கல்வித் திட்டமானது பரீட்சையை மையமாக் கொண்டு அமைய பிற நாட்டு கல்வித்திட்டமானது அறிவுஇதிறன்கள்இமனப்பாங்குகள்இதேர்ச்சிகள் போன்றவற்றை பண்படுத்தும் வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

எம் கல்வித் திட்டமானது பரீட்சையை மையமாகக் கொண்டு அமைவதோடு தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்காலசந்ததியை உருவாக்கும் விதத்திலேயே இருக்க வேண்டும் என்பதே எல்லோரது அவா ஆகும்.




# முன்பள்ளியின் அவசியம்

முன்பள்ளிக் கல்வி என்பது ஒரு குழந்தை ஆரம்பக் கல்வியை பெறுவதற்கான சிறந்த இடமாகும் என றவேர்ஸ் குறிப்பிடுகின்றார். அதாவது முன்பள்ளிக் கல்வியில் ஏற்படும் அதாவது முன்பள்ளிகள் ஆரோக்கியமும், மகிழ்ச்சியும் நிறைந்த சூழலும் வழங்குவதோடு பின்னர் அதன் கற்றலுக்கும் உடல் உள மனவெழுச்சி ஒழுங்குபடுத்தப்படாதவர்களாகவும் நோக்கமின்றி அலையும் பாங்கினராகவும் இருப்பர்.அவர்களை ஒழுங்குபடுத்தி நோக்கத்தை எய்தக்கூடியவர்களாக பெறக் கூடிய மனோதைரியம் அப்பிள்ளையின் மனதில் பதிய ஆரம்பிக்கும். அத்தோடு சுதந்திர சிந்தனை, சுயகட்டுப்பாடு,ஒழுக்கம், கிடைக்கும் சந்தர்ப்பங்கள் பிள்ளையின் ஆளுமையை வளர்க்க உதவுவதோடு அவர்களது சமூகத் திறனை மேம்படுத்தவும் உதவுகின்றது.





அனுபவம்தான் அப்பிள்ளையின் பிந்திய ஆர்வத்திற்கு அல்லது கற்றல் மீதான வெறுப்பிற்கு வழியமைத்துக் கொடுக்கின்றது.

எனவே முன்பள்ளிக் கல்வியானது பிள்ளையின் சுயசிந்தணை, சுய ஆற்றல், சுய ஆர்வம் போன்றவற்றிற்கு வழியமைத்துக் கொடுக்கின்றது.

எதிர்காலக் கற்றலுக்காகக் கற்றல் எனும் குறிக்கோளினை நிறைவேற்றும் பருவம் முன்பள்ளிப் பருவமாகும். விருத்திக்கும் அடித்தளமாகக் விளங்கக் கூடிய பயனுள்ள அனுபவங்களை வழங்குகின்றது.

6 வயதிற்கு முன்னைய கற்றல் அனுபவங்கள் குழந்தையின் விருத்தியில் உருவாக்க காலமாகும். இப்பருவத்தில் இடம்பெறும் கற்றல் வெற்றிகரமாக அமையும்போது அது பாடசாலையின் உயர்மட்ட அடைவுக்கு ஒரு முன் மாதிரியாக அமையும் எனலாம்.

பாலர் பள்ளி சிறுவர்கள் மாற்றும் செயற்பாட்டினை முன்பள்ளிக் கல்வி தொடங்கி வைக்கவே ஆரம்ப கல்வி வளர்த்துச் செல்கின்றது எனலாம்.

முன் பள்ளிக் கல்வி செயற்பாடுகள் அமைதியானதும், உறுதியானதும் உயிர்துடிப்புள்ளதுமான விளையாட்டு அனுபவங்களைக் கொண்டு பிள்ளையின் தசைநார் நுண்ணியக்க, பேரியக்க அபிவிருத்திக்கு வலுவுட்டும் உந்து சக்தியாக அமைதல் வேண்டும்.

அப்போதுதான் ஆரம்பக் கல்வியைப் ஒத்துழைப்பு, மற்றவர்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு போன்றவற்றை பிள்ளையிடம் வெளிப்படுத்தவும் வலியுறுத்தவும் முன் பாடசாலை வகுப்புகளை தவிர வேறு பொருத்தமான இடம் இல்லை என்றே கூறலாம்.

35 வயதிற்குட்பட்ட வருடங்கள் பிள்ளையின் விருத்தில் முக்கியமானவை. இப்பருவத்திலே ஆரம்ப சமூகமயமாக்கல் தொடங்குகின்றது.

பிற குழந்தைகளுளுடன் கலந்து பழகக் 5 வயதிற்குட்டபட்ட காலத்தில்தான் பிள்ளையின் உடல் உள வளர்ச்சிகள் பெரிதும் இடம் பெறுகின்றது. ஒரு சிறு பிள்ளை ஆரம்பத்தில் கற்றுக் கொண்டதையே அது வளர்ந்த பின்பும் பிரதிபலிக்கச் செய்கின்றது என சிக்மன் புரோய்ட் கூறுகின்றார்.

அந்த வகையில் 6 வயதிற்கு முன்னராக ஏற்படுகின்ற கற்றல் அனுபவங்கள் ஆரம்ப கல்வியில் மிக்க பயனுள்ளதாக அமைகின்றது.



# சிறுவர் தொழிலாளர்கள் வேண்டாம்

சிறுவர்கள் சமூகத்தின் செல்வங்களாவர். எதிர்கால சமூகத்தை வலுவூட்டி வளர்க்கும் பொறுப்பு வளர்ந்தோர் மீது இருக்கின்றது.

கடந்த 20 ஆண்டுகளில் முதன் முறையாக சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு கடந்த ஜுன் மாதமே தகவல் வெளிட்டிருந்தது.

உலகளவில் 160 மில்லியன் சிறுவர்கள் தொழிலாளியாக இருப்பதாகவும் மேலும், 80 மில்லியன் சிறுவர்கள் உடல் மற்றும் உள ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்திருந்தது.

இன்றைய சூழலில் பலர் பொருளாதார ரீதியாக பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனவே மாணவர்கள் பணத்தினை கையில் பெற்று கொண்டதன் பின்னர் ஈர்க்கப்பட்டு முற்றாக முழுநேர வேலையில் ஈடுபடுவதற்க்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

பொருளாதார நிலைமையை சீர் செய்ய தங்கள் குடும்ப சுமைகளை கையில் எடுத்துக்கொண்டுள்ள பல சிறுவர்கள் இருக்கிறார்கள்.இவர்களை இதில் இருந்து நிறுத்தி மீண்டும் பாடசாலைகளில் சேர்ப்பதற்கான ஓர் ஏற்பாடு இருக்க வேண்டும்.

இல்லையேல் கல்வியில் இடைவிலகும் மாணவர்கள் தொகை அதிகரிப்பதோடு குறைந்த சம்பளத்தில் சிறுவர் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்ற நிலை மேலும் அதிகரிக்கும்.உலகலாவிய ரீதியில் சிறுவர் தொழிலாளர் உருவாவதை பலரும் ஏற்றுகொள்ளவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் ஜுன் மாதம் 12 ஆம் திகதி சர்வதேச குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

குழந்தை தொழிலாளர் முறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதே இந்த தினத்தின் நோக்கமாகும்.அதே நோக்கம் இந்த சிறுவர் தினத்திலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு மீண்டும் கல்வி வழங்கப்பட வேண்டும்.

18 வயதுக்கு உட்பட்டவர்கள் கட்டாய இலவசக் கல்வி பெற வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டம் கூறினாலும் சிறுவர்கள் கூலிக்கு அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

யுனிசெப் நிறுவனம் குழந்தை தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை மூன்று வகையாக பிரித்துள்ளது. உடல் ரீதியானபாதிப்பு, உளவியல் ரீதியானபாதிப்பு, உணர்வு மற்றும் சமூகரீதியான பாதிப்பு என்பவையே அவையாகும்.

கொடிய வறுமை,ஊட்டச்சத்துக் குறைபாடு,கல்வியறிவு பெற முடியாத நிலை,உடல் நலனை பாதிக்கக் கூடிய ஆபத்தான சூழல்,காற்றோட்டம் இல்லாத குறுகிய அறை போன்றவை சிறார்களின் உடல் நலனைப் பெரிதும் பாதிப்பதால் ஆஸ்துமா,காசநோய் போன்றஆபத்தான நோய்களின் தாக்குதலுக்கு இலக்காகின்றனர்.

மனரீதியான வளர்ச்சி என்பது எழுத்தறிவு,எண்ணறிவு மற்றும் நடைமுறை வாழ்க்கை முறையினைப் பற்றிய பொதுவான அறிவு போன்றவை உள்ளடங்கியதாகும்.

இவற்றில் ஏற்படும் மாற்றங்கள் சிறார்களை மிகவும் கடுமையாகப் பாதிக்கின்றன. கல்வியறிவு பெறமுடியாமல் வறுமையை விரட்ட எண்ணி சிறுவயது முதல் குறைந்த சம்பளத்திற்கு வேலைக்கு செல்லும் இவர்களால் சமுதாயத்தில் கடைசி வரை ஒரு நல்ல நிலைமையை அடைய முடியாமல் சமூகத்தால் புறக்கணிக்கப்படும் நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர்.

# இந்திய ரூபாயில் வர்த்தகம்: அமானா வங்கி ஏற்பாடு

ஒப்பற்ற மற்றும் வினைத்திறனான சர்வதேச வியாபார அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில், இந்திய ரூபாவில் நேரடியாக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடக்கூடிய வியாபார நாளிகையை அறிமுகம் செய்துள்ளதாக அமானா வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தின் பிரகாரம், இந்திய ரூபாவை அந்நிய நாணய கொடுப்பனவாக ஏற்றுக்கொள்ளும் முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், சார்க் பிராந்தியத்தினுள் புதிய வர்த்தக யுகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த அறிமுகத்துடன், வாடிக்கையாளர்களுக்கு தமது வியாபார கொடுக்கல் வாங்கல்களை இந்திய ரூபாவில் நேரடியாக மேற்கொள்ள முடியும். இதனால் நாணயங்களுக்கிடையிலான அந்நியச் செலாவணி இழப்புகளை



தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதுடன், நாட்டில் மட்டுப்படுத்தப்பட்டளவில் கையிருப்பிலுள்ள அமெரிக்க டொலர் இருப்புகளை பேணக்கூடியதாகவும் இருக்கும்.

“இந்திய ரூபாவை நேரடியாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு இந்த முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளமையானது, இரு நாடுகளுக்கிடையே வியாபாரங்களை மேம்படுத்த உதவியாக அமைந்திருப்பதுடன், இந்திய சந்தையில் வளர்ந்து வரும் வாய்ப்புகளை கைப்பற்றி வியாபாரங்களை கட்டியெழுப்புவதற்கு ஏதுவாகவும் அமைந்திருக்கும்.” என்றார்.

இந்திய ரூபாய் கணக்கு நிறுவப்பட்டமை தொடர்பில் அமானா வங்கி திறைசேரி மற்றும் நிதிச்சேவைகள் பிரிவின் தலைமை அதிகாரி ஹறிந்திர ஒபேசேகர கருத்துத் தெரிவிக்கையில், “கடந்த காலங்களில் அமானா வங்கியினால் பிரதான சர்வதேச நாணயங்களில் சர்வதேச வியாபாரங்களை முன்னெடுப்பதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

தற்போது இலங்கை மத்திய வங்கியினால் இந்திய ரூபாயை அனுமதியளிக்கப்பட்ட சர்வதேச நாணயமாக ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், இந்திய ரூபாய் கணக்கை நிறுவி, எமது வாடிக்கையாளர்களுக்கும், அவர்களின் பங்காளர்களுக்கும் சௌகரியமான வியாபார நாளிகையை ஏற்படுத்திக் கொடுத்து ஆதரவளிக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.” – என்றார்.




# மக்கள் வங்கியின் mPOS தீர்வு

மக்கள் வங்கியானது தனது புத்தாக்கமான People's Mobile Point of Sale (People's mPOS) தீர்வை பெருமையுடன் அறிமுகப்படுத்துவதுடன், எந்த இடத்திலிருந்தும் அட்டை மூலமான கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் வகையில் சிறு மற்றும் நுண்-நிலை வணிகங்களுக்கு வலுவூட்டுகிறது.

இந்த அதிநவீன தொழில்நுட்பத்தின் அறிமுகத்துடன், வணிகர்கள் இப்போது தமது mPOS சாதனத்தைப் பயன்படுத்தி பரிவர்த்தனைகளைச் செயல்படுத்தலாம் என்பதுடன், இது அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியத்தையும், நெகிழ்வுத்தன்மையையும் வழங்குகிறது.

People's mPOS தீர்வு குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் நுண்-நிலை வணிகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது வணிகர்களுக்கு விசா,மாஸ்டர்கார்டு மற்றும் லங்கா பே ஜேசிபி அட்டைகளை ஏற்றுக்கொள்ள இடமளிப்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு பரந்த அளவிலான கொடுப்பனவுத் தெரிவுகளை உறுதி செய்கிறது.

People's mPOS ஐப் பயன்படுத்துவதன் குறிப்பிடத்தக்க நன்மைகளில் ஒன்று பாரம்பரிய அட்டை முனையங்களுடன் ஒப்பிடும்போது குறைந்த தள்ளுபடி தரகுப்பண வீதமாகும்.

வணிகர்கள் இந்த கொடுப்பனவு ஏற்புத் தீர்வை குறைந்தபட்ச ஆவணங்கள் மற்றும் சிரமமின்றி பெற்றுக்கொள்ளலாம். மேலும், இத்தீர்வு மேம்படுத்தப்பட்ட இயங்குதிறன் மற்றும் நெகிழ்வுத்தன்மையை வழங்குவதால், வணிகர்கள் எங்கிருந்தும், எவ்வேளையிலும் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ள இடமளிக்கும்.

வர்த்தக சுடர்

# DELL உடன் 30 ஆண்டு கூட்டாண்மையை கொண்டாடும் SOFTLOGIC



Softlogic Information Technologies (Pvt) Ltd (SITL) ஆனது அண்மையில் Dell Technologies Inc உடன் இணைந்து தனது 30ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

DELL மற்றும் அதன் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களை கௌரவிக்கும் வகையில் இந்த சாதனையை கௌரவிக்கும் வகையில், SITL ஆனது கொழும்பு Cinnamon Lakeside ஹோட்டலில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் சிறிய, நடுத்தர, பெரிய அளவிலான நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட 100 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் கடந்த 30 வருடங்களாக Dell இன் வர்த்தகநாம பிரசன்னத்தை வலுப்படுத்துவதில் SITL இன் குறிப்பிடும்படியான பங்கு தொடர்பான பயணத்தின் பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ள பங்கேற்பாளர்களுக்கு ஒரு தனித்துவமான தளத்தை இந்த நிகழ்வு ஏற்படுத்தியிருந்தது.

அது மாத்திரமன்றி இந்நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட அண்மைய Dell தயாரிப்புகள் தொடர்பில் அறிந்து கொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

உள்ளூர் சந்தையில் Dell வர்த்தகநாமத்தை ஒரு முக்கிய வர்த்தகநாமமாக நிலைநிறுத்துவதில் தாம் ஆற்றிய முக்கிய பங்கு தொடர்பில் இங்கு எடுத்துக்காட்டப்பட்டது.

# அலியான்ஸ் சிறுவர் பாதுகாப்பு திட்டம்

அலியான்ஸ் லங்கா நிறுவனம், நாட்டின் மிகவும் பெறுமதிமிக்க சொத்தாகிய நமது சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான தனது பயணத்தின் மற்றொரு முக்கியமான படியாக “அலியான்ஸ் ப்ரோடெக்ட்” என தொனிப்பெயரின் கீழ் வீதிப்போக்குவரத்தின் போது சிறுவர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கான தனது அர்ப்பணிப்பினை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வீதி விபத்துக்களால் 700 இற்கும் அதிகமான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளதுடன், ஒட்டுமொத்த வீதி விபத்துக்களில் கிட்டத்தட்ட 40% மோட்டார் சைக்கிள் தொடர்பான விபத்துக்களாகும்.

இதற்கிடையில், உயிரிழந்தவர்களில் 63மூ பேர் பொருளாதார ரீதியாக தேசத்திற்கு வலுச் சேர்க்கக்கூடிய 15 முதல் 64 வயதுக்குட்பட்ட வயதினராக உள்ளதுடன், இதில் பலரும் சிறுவர்கள் என்பது மிகவும் வருந்தத்தக்கது.

அலியான்ஸ் ப்ரோடெக்ட் இல் வீதிப் போக்குவரத்தின் போது சிறுவர்களின் பாதுகாப்பை ஊக்குவிப்பதில் ஓயாத அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்ற அலியான்ஸ் லங்கா நிறுவனம், மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கும் சிறுவர்களுக்காக மற்றுமொரு சிறுவர் – பாதுகாப்பு – தலைக்கவச விநியோக கட்டத்தை தொடங்கியுள்ளது.



# SVAT ரத்து: அரசின் முடிவுக்கு JAAF வரவேற்பு

01 ஏப்ரல் 2025 வரை எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரி (SVAT) ஒழிப்பை ஒத்திவைக்க அண்மையில் அமைச்சரவை எடுத்த முடிவிற்கு ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF) தனது வரவேற்பைத் தெரிவித்துள்ளது.

SVAT ஒழிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு முன் "வலுவான வரி திரும்பப்பெறும் பொறிமுறையை" நிறுவுவதை உறுதி செய்வதற்கான முடிவை JAAF குறிப்பாகப் பாராட்டியுள்ளது.

தொழில்துறையைப் பாதுகாக்க பல்வேறு தரப்பினர் எவ்வளவு கடினமாக உழைத்துள்ளனர் என்பதை இந்த முடிவு காட்டுகிறது மற்றும் அவர்களின் முயற்சிகளுக்காக JAAF அவர்களையும் பாராட்டியுள்ளது.

ஆடை ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி குறைந்து நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த ஒத்திவைப்பு அறிவிக்கப் பட்டுள்ளது.

எனவே, முறையான பணத்தைத் திரும்பப்பெறும் வழிமுறை இல்லாமல் SVATI அகற்றுவது அவர்களின் பணப்புழக்கத்திற்கு இடையூறு ஏற்படும் சாத்தியக்கூறு உள்ளது. எனவே இந்த ஒத்திவைப்பு அவர்களுக்கு அந்த ஆபத்தைத் தவிர்க்க உதவுகிறது.



# இலங்கையின் பெண்களுக்கு வலுவூட்டல்

மாற்றத்தின் சக்தி வாய்ந்த முகவர்களாக பெண்கள் அமைந்திருப்பார்கள். எவ்வாறாயினும், தமது இல்லங்களிலும் சமூகங்களிலும் சமத்துவத்துடன் கூடிய தீர்மானமெடுப்போராக அவர்களை பங்கேற்கச் செய்வதற்கு பொருத்தமான சூழலை ஏற்படுத்த அதிகளவு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கும் சுபீட்சமான எதிர்காலத்துக்கும் பங்களிப்பு செய்வதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்கி அதனூடாக பயன்பெறச் செய்வது என்பது கட்டாயமானதாகும்.

முன்னணி பெண்கள் மாதவிடாய் தூய்மை பராமரிப்பு வர்த்தக நாமமான ஹேமாஸ் கொன்சியுமர் பிரான்ட்ஸ் வழங்கும் குநஅள, பெண்களுக்கு எப்போதும் தாம் தெரிவு செய்யும் துறைகளில் தமது கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்கு ஊக்கமளிப்புகளை வழங்கியுள்ளது.

தமக்கும் சமூகத்துக்கும் சிறந்த எதிர்காலங்களை கட்டியெழுப்பிக் கொள்வதற்கு பெண்கள் ஆற்றும் முக்கிய பங்களிப்பை கவனத்தில் கொண்டு, H.E.R மையம்" (Help. Empower. Rise) என்பதை அறிமுகம் செய்வதனூடாக பெண்களுக்கான முன்னேற்றத்தை துரிதப்படுத்த முன்வந்துள்ளது.

ஹேமாஸ் கொன்சியுமர் பிரான்ட்ஸ் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் சியான் ஜயவீர கருத்துத் தெரிவிக்கையில், "பெண்கள் மாதவிடாய் தூய்மையில் அக்கறை கொள்ளும் முன்னணி வர்த்தக நாமமான குநஅள, பெண்களின் வளர்ச்சிக்கு வலுவூட்டி, சமூக தடங்கல்களுக்கு அப்பால் கனவு காண்பதற்கு ஆதரவளித்து வருகின்றது.

பெண்களின் சுகாதாரம் மற்றும் தூய்மை தேவைகளை நிவர்த்தி செய்வதில் எமது அர்ப்பணிப்பின் இயற்கையான நீடிப்பாக உ.நு.சு. மையம் அமைந்துள்ளது. விழிப்புணர்வை ஏற்படுத்தல், சமூகங்களுக்கு கற்பித்தல் மற்றும் பல்வேறு தடைகளை கடந்து முன்னேறல் தொடர்பில் தீர்வுகளையும் வளங்களையும் வழங்குகின்றது." என்றார்.



# சியபத புதிய சலுகை

சம்பத் வங்கி பிஎல்சியின் முழு உரிமம் பெற்ற துணை நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி, வாடிக்கையாளர்களின் உடனடி நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட செயற்திறன்மிக்க தயாரிப்பான "சியபத பாஸ்ட் டிராஃப்ட்" என்ற அதன் மற்றுமொரு சலுகையை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது.

"சியபத பாஸ்ட் டிராஃப்ட அறிமுகப்படுத்தப்பட்டதன் முதன்மை நோக்கம், வாடிக்கையாளர்களுக்கு ஒரே கூரையின் கீழ் பலவிதமான நிதி தயாரிப்புகளை அணுகுவதற்கான வசதியை வழங்கும் அதே வேளையில், கடன் வழங்கும் பிரிவினை பல்வகைப்படுத்துவதாகும்.

தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் தங்கள் நிதித் தேவைகளை திறமையாகவும் செயற்திறனுடனும் நிவர்த்தி செய்யும் விதத்திற்கு இது ஓர் புதிய வரையறையினை கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

"சியபத பாஸ்ட் டிராஃப்ட்" அதன் தனித்துவமான தயாரிப்பு தன்மைகளுடன் சிறப்பு பெற்று விளங்குறது. 12 மாத கால அவகாசம் மற்றும் எஞ்சிய பெறுமதியுடன் ஒரே வணிக நாளில் உருவாக்கக்கூடிய சுழலும் கடனை வழங்குகிறது.

மேலதிக தகவல்களுக்கு, சியபத பாஸ்ட் டிராஃப்ட் ஹொட்லைன் 0777 605 605 ஐ தொடர்பு கொள்ளவும் அல்லது www.siyapatha.lk ஐ பார்வையிடவும்.



# MEDIHELP மருத்துவமனைக்கு ISO 15189

MediHelp மருத்துவமனைக் குழுமம், இலங்கையின் மிகப்பெரிய அடிப்படை சுகாதார மருத்துவமனை சங்கிலித் தொடர், ISO 15189 ஐ அடைவதன் மூலம் அதன் விரைவான விரிவாக்கத்தின் போது ஆய்வக அமைப்புக்கான உலகளாவிய அங்கீகாரத்துடன் வலுவான தரமான சேவையில் ஒரு புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது.

MediHelp மருத்துவமனைகள் குழுமமானது, இலங்கையர்களுக்கு குறைந்த விலையில் முதன்மை பராமரிப்பு சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் தனது வசதிகளை விரைவாக விரிவுபடுத்தும் இவ்வேளையில், அதன் ஆய்வக அமைப்பு இலங்கை தர மதீப்பீட்டு அங்கீகாரத்துடன் ISO 15189 சர்வதேச தரப்படுத்தலைப் பெறுவது மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

ISO15189 சர்வதேச தரப்படுத்தல் என்பது மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ ஆய்வகங்களின் தரப்படுத்தலை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதலாகும். இது தரம் மற்றும் புதுப்பித்த அறிவுடன் பிரிவுகளை நிர்வகிக்க மிகவும் துல்லியமான மற்றும் நம்பகமான நோயறிதல் மருத்துவ அறிக்கைகளை வழங்குகிறது.

மருத்துவ ஆய்வகத்தின் தர நிர்வகிப்பு அமைப்பு, தொழில்நுட்பத் திறன் மற்றும் நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் ஆகியவை முழு அங்கீகார செயல்முறையின் போது கடுமையாக மதிப்பீடு செய்யப்படுகின்றன.

இந்த மதிப்பீட்டு செயல்முறையானது இலங்கை தர மதிப்பீட்டு அங்கீகார சபையினால் பரிந்துரைக்கப்பட்ட சுயாதீன அங்கீகார அமைப்பினால் மேற்கொள்ளப்படுகிறது மற்றும் இலங்கை தர மதிப்பீட்டு அங்கீகார சபை ISO15189 சர்வதேச தரப்படுத்தலுக்கு பரிசீலிக்கப்படும் நடைமுறைகளை பூர்த்தி செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துகிறது.




# பேபி செரமிக்கு விருது

குழந்தை பராமரிப்பு வர்த்தகநாமமான Baby Cheramy, பெருமைக்குரிய Global Brand Magazine UK இன் Global Brand விருதுகளில் "Best Baby Care Brand, Sri Lanka - 2023" (சிறந்த குழந்தை பராமரிப்பு வர்த்தகநாமம், இலங்கை – 2023) எனும் சர்வதேச ரீதியிலான அங்கீகாரத்தைப் பெற்று அதன் சிறப்பை மீண்டுமொருமுறை நிரூபித்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள பெற்றோரின் பாராட்டைப் பெற்ற, பாதுகாப்பான மற்றும் நம்பகமான குழந்தை பராமரிப்பு தீர்வுகளை வழங்குவதில் பேபி செரமி கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இந்த அங்கீகாரம் எடுத்துக்காட்டுகிறது.

இந்த சாதனை குறித்து தனது மகிழ்ச்சியை வெளியிட்டு கருத்துத் தெரிவித்த, Hemas Consumer Brands நிறுவனத்தின் குழந்தை பராமரிப்பு – சந்தைப்படுத்தல் முகாமையாளர் அஸ்மரா மன்னன், இந்த விருதைப் பெறுவதானது, குழந்தை பராமரிப்பு தயாரிப்புகளில் தரம் மற்றும் புத்தாக்கங்களில் இடைவிடாத கவனம் செலுத்தும் பேபி செரமிக்கு ஒரு சான்றாகும்.

உலகளாவிய அரங்கில் எமக்கு இவ்வாறான அங்கீகாரம் கிடைத்தமை தொடர்பில் பெருமை கொள்கிறோம். எமது நுகர்வோரின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் நம்பிக்கைக்கு இவ்வேளையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்," என்றார்.

# Samsung மற்றும் Warner Bros. Pictures இணைவு

இத்தொழில் சார் கூட்டானது அனைத்து ஆயிரக்கணக்கான சர்வதேச ரீதியிலான சில்லறை விற்பனையாளர்களுக்கு பிரபலமான திரைப்பட Trailer களை வழங்குவதன் மூலம், முன்னெப்போதையும் விடவும், நுகர்வோரை மகிழ்விக்கும் முகமாக அதிநவீன 8K தரத்திலான திரைப்படங்களினை அவர்கள் கையாருக்கே கொண்டுவருகின்றது.

தொடர்ச்சியாகப் 17 ஆண்டுகளாக உலகிலேயே முன்னணித் தொலைக்காட்சி தயாரிப்பாளரான Samsung Electronics, ஆனது Warner Bros. Pictures உடன் ஒரு அர்த்தபூர்வமான கூட்டுவணிகச் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றன்து.

இக்கூட்டுவணிகச் செயற்பாட்டினைத் தனது நியோ QLED 8K திரைகளில் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற திரைப்பட வுசயடைநச களைக் காண்பிக்கின்றது.



இதன் மூலம் சர்வதேச ரீதியில் 65,000 க்கும் மேற்பட்ட Retail Store களில் பார்வையாளர்களைக் கவர்ந்து வருகின்றது.

"இத்தொழில் சார் கூட்டானது 8மு யினை உளீற்கும் ஒரு அற்புதமான முயற்சியாகும். இது நேுமு ஞடுநுனு 8K இன் சிறப்பியல்புகளினை வெளிக்கொணருகின்றது.

அது மட்டும் அல்லாது சினிமா தரத்தினில் திரைப்படங்களைப் பார்த்து ரசிப்பதற்கு அதன் பாவனையாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கின்றது" என்று Samsung Electronics Visual Display Business இன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட உப தலைவர் Cheolgi Kim அவர்கள் கூறினார்.

# COCA-COLAவின் கடற்கரை சுத்திகரிப்பு

Coca-Cola Sri Lanka நிறுவனம், தனது Adopt A Beach திட்டத்தை மூன்றாவது ஆண்டாக இம்முறையும் முன்னெடுத்து, இலங்கையின் கடற்கரைகளைப் பாதுகாக்கும் தனது பணியைத் தொடர்கிறது.

இந்த உற்சாகமூட்டும் நடவடிக்கை, 2023 செப்டம்பர் 16 ஆம் திகதி சர்வதேச கடற்கரை சுத்தம் செய்யும் தினத்தைக் கொண்டாடுவதோடு, கடற்கரை பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

Coca-Cola Sri Lanka நிறுவனம் மற்றும் Clean Ocean Force இடையேயான ஒத்துழைப்பைக் கொண்டாடும் வகையில், மட்டக்குளி Crow Island கடற்கரையில் பிரத்யேக கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்வு மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.



இந்த நிகழ்வில் மேல் மாகாண ஆளுநரும் இலங்கை விமானப்படையின் தளபதியுமான கௌரவ ரொஷான் குணதிலக்க மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பிறுப்பினர்கள், கொழும்பு மாநகர சபை, சுற்றுச்சூழல் பொலிஸ் பிரிவு, கடற்கரை பாதுகாப்பு திணைக்களம், கழிவு நிர்வகிப்பு அதிகார சபை மற்றும் Crow Island கடற்கரை முகாமையாளர் சங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அரசாங்க அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.



# HAYCARB இன் ACTIVATE அறிமுகம்

Haycarb PLC, அதிக மதிப்புள்ள தேங்காய் ஓட்டிலுள்ள செயற்பாட்டு கார்பன் தயாரிப்பில் உலகளாவிய முன்னணியிலும் மற்றும் Hayleys PLC குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாகவும் உள்ளதுடன் அதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டி "ACTIVATE" என்ற புதிய ESG திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த திட்டம் சுற்றுச்சூழல், சமூக மற்றும் கட்டுப்படுத்தல் (ESG) இலக்குகளில் கவனம் செலுத்துகிறது மற்றும் 2030 வரை நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் மூலோபாயத்தை வழிநடத்துகிறது.

"ACTIVATE" ஆனது Hayleys Lifecode, Hayleys குழுமத்தின் நுளுபு கட்டமைப்பின் இலக்குகளுடன் சீரமைக்கப்பட்டுள்ளது, மேலும் 2030 ஆம் ஆண்டளவில் நுளுபு தனது முயற்சிகளை அடைய வழிகாட்டுகிறது.

ACTIVATE ஐந்து முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதாவது மீளமைத்தல், புதுப்பித்தல், உற்சாகப்படுத்துதல், உயர்த்துதல் மற்றும் புத்தாக்கம் செய்தல் ஆகும். சூழல், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், சமூகங்கள் மற்றும் அதன் தயாரிப்புகள் உட்பட உயலஉயசடி இன் மதிப்புச் சங்கிலியின் அனைத்து அம்சங்களுக்கும் நிலையான மதிப்பை வழங்க இது ஒரு குறிப்பிட்ட மற்றும் தெளிவான வழியை வழங்குகிறது.

ACTIVATE மூலம், Haycarb 2030க்குள் அடைய வேண்டிய இலக்குகளை வலியுறுத்தியுள்ளது. இந்த இலக்குகளில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டை 50% அதிகரிப்பது, பொருட்களுக்கு 25% நிலையான பேக்கேஜிங் பயன்படுத்துதல் மற்றும் 10% அதிகமான தண்ணீரை நிலையானதாக பெறுதல் ஆகியவை அடங்கும்.

# யாழில் தனது இருப்பை விரிவுபடுத்தும் சூரிய மின்கல ஜாம்பவான்







Hayleys Fentons இன் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பிரிவான Hayleys Solar, யாழ்ப்பாணத்தில் தனது சமீபத்திய அறிமுகத்தை தொடர்ந்து, நாட்டின் தெற்கிலிருந்து வடக்கே சூரிய சக்தியை அனைவரும் அணுகக்கூடிய வகையில் அதன் எல்லைகளை விரிவுபடுத்துகிறது.

இலக்கம் 148-1/1, தபால் பெட்டிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிதாக நிறுவப்பட்ட நிறுவனத்தின் அனுபவ மையம், பிரதேச மக்களுக்கு சூரிய சக்தியை அணுகக்கூடியதாக மாற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

இந்த மையம், மேற்கூரை PV தொகுதிகள், மின்கலங்கள் மற்றும் இன்வேர்ட்டர்கள் உள்ளிட்ட உலகத் தரம் வாய்ந்த சூரிய மின்கல தீர்வுகள், சூரிய சக்தியில் இயங்கும் நீர் பம்பிகள், மின் விளக்குத் தொகுதிகளை வழங்குவதோடு, சூரிய மின்கலத் தொகுதிகளின் நேரடி விளக்கக்காட்சிகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

தூய வலுசக்தி தீர்வுகளை பயன்படுத்துவதற்கும், நிலைபேறான எதிர்காலத்திற்கு பங்களிப்பதற்கும் தனிநபர்களை ஊக்குவிக்கின்ற ஈடுபாட்டுடன் கூடிய இந்த விளக்கக்காட்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

Hayleys Solar மாத்தறையில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்திற்கு விரிவுபடுத்தும் முடிவானது, பரந்தளவிலான சமூக தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளப்படுகிறது.

இலங்கையின் தெற்கிலும் வடக்கிலும் தனது இருப்பை நிறுவுவதன் மூலம், பல்வேறு சமூகங்களின் வலுசக்தி தேவைகளை நிவர்த்தி செய்வதை உயலடநலள Solar நோக்கமாகக் கொண்டுள்ளது.

# ALUMEX-DTET ஒப்பந்தம்



Hayleys இன் துணை நிறுவனமும், இலங்கையில் உள்ள அலுமினிய உற்பத்தியாளருமான Alumex PLC ஆனது, இளைஞர், யுவதிகளுக்கு வாய்ப்புகளை உருவாக்கி, அவர்களுக்கு உலகளாவிய தரத்திலான, திறமையான புனையுபவர்களாக சான்றளிக்கும் நிபுணத்துவத்தை வழங்கும் வகையில், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்துடன் (DTET) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

Alumex PLC மற்றும் னுவுநுவு ஆகியன, தொழில்துறையின் எப்போதும் வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்ள, மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு அதிநவீன மாதிரிப் பயிற்சி மையத்தை நிறுவி, நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் இந்த முயற்சியை விரிவுபடுத்தும் வகையிலான உலகத் தரம் வாய்ந்த பயிற்சி வசதி மையங்களை நிறுவ எதிர்பார்த்துள்ளது.

இந்த அற்புதமான முயற்சியானது, தொழில்துறையின் புனைதல் தரத்தை உயர்த்த, முழுமையாக மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் அதிநவீன கட்டுருவாக்கல் நுட்பங்களுடன் மாணவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

பாடத்திட்ட அறிவு மற்றும் நடைமுறை பயன்பாடு ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதன் மூலம், Alumex மற்றும் DTET ஆகியன நவீன பாதையில் வெற்றிபெற அடுத்த தலைமுறை புனையுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றன.

Alumex நிறுவனத்துடனான கூட்டாண்மையானது, கட்டுருவாக்கத் துறையில் திறன்களை மேம்படுத்தவும், தொழில் தரத்தை உயர்த்தவும் உதவும் என்பதை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் ஒப்புக்கொள்கிறது.

DTET ஆனது, நாடு முழுவதும் தங்கள் பயிற்சி மையங்களை விரிவுபடுத்த எதிர்பார்ப்பதோடு, இளைஞர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் அறிவை வழங்குவதன் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மதிப்புமிக்க பங்களிப்பை மேற்கொள்ளும் பணியாளர் சக்தியாக அவர்களை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குகிறார்கள் என நம்புகின்றது.

# சிறுநீரகக் கல் அகற்றும் சிகிச்சை வெற்றிகரம்

இலங்கையின் முன்னணி தனியார் மருத்துவமனையான நவலோக்க மருத்துவமனை குழுமம், மருத்துவமனை வரலாற்றில் முதன்முறையாக mini nephrolithotomy (mini-PCNL) மூலம் சிக்கலான சிறுநீரக கற்களை அகற்றும் அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து மாபெரும் சாதனையை படைத்துள்ளது.

முழு இடது சிறுநீரகத்தையும் உள்ளடக்கிய ஒரு பெரிய 4 சென்றி மீற்றர் சிறுநீரகக் கல்லை அகற்றிய இந்த செயல்முறையின் சிக்கலான தன்மை காரணமாக, இது மருத்துவத்தில் ஒரு பெரிய நடவடிக்கையாக கருதப்படுகிறது.



அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் அதிநவீன இயந்திர உபகரணங்களுடன் நவலோக்க மருத்துவக் குழுவினர் சிறுநீரகக் கல்லை எவ்வித சிக்கலும் இல்லாமல் அகற்றி அதன் சிறப்பை அடையாளப்படுத்தினர்.

அறுவை சிகிச்சை நிபுணர், இரண்டு தாதி உதவியாளர்கள், இரண்டு மருத்துவ தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் ஒரு ரேடியலஜிஸ்ட் உட்பட ஆறு பேர் மட்டுமே அறுவை சிகிச்சை குழுவில் இருந்ததால், அவர்களது கடின உழைப்புக்கு கிடைத்த வெற்றியே இதன் விளைவாகும்.

கல் கண்டுபிடிக்கப்பட்டது முதல் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிவடையும் வரையிலான முழு செயல்முறையும் 24 மணி நேரத்திற்கும் குறைவான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

இது நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் வினைத்திறனையும் நோயாளிகளின் பராமரிப்பில் அவர்களின் அர்ப்பணிப்பையும் காட்டுகிறது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு, நோயாளி குணமடையும் வரை மருத்துவமனை ஊழியர்கள் நோயாளி மிது மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள்.

# செலான் கிரடிட் கார்ட்ஸின் புதிய சலுகை



மனம் விரும்பும் தேவைகளுக்கு அத்தியாவசியமான செலான் கார்ட்ஸ், அனைத்து பாடசாலைக் கட்டணக் கொடுப்பனவுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட புத்தகசாலைக் கொள்வனவுகளுக்கு 3 மாத 0வீத வட்டிவீதத்தில் இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகம் செய்ததன் ஊடாக குடும்பங்கள் மற்றும் மாணவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட புதுமையான முன்னெடுப்பொன்றை ஆரம்பித்து வைத்தது.

இந்த புதிய சலுகையுடன், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களின் பொருளாதாரச் சுமையை தளர்த்துவதற்கு செலான் கார்ட்ஸ் முயற்சிப்பதோடு, ஒவ்வொரு பிள்ளையும் தரமான கல்வியைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்கிறது.

இந்த 0வீத வட்டிவீத இலகுக் கொடுப்பனவுத் திட்டங்கள், தமது செலவுகளை குடும்பங்கள் சிறப்பாகக் கையாளுவதற்கு ஊக்குவிக்கும் அதேவேளை மாணவர்களின் கல்விசார் வெற்றிகளுக்கு அவசியமான கருவிகளைப் பெற்றுத்தரும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

செலான் வங்கியின் வாடிக்கையாளர் வங்கிச்சேவை பிரதி பொது முகாமையாளர் யூஜின் செனவிரத்ன குறிப்பிடும்போது, “எதனையும் முற்றிலும் மாற்றியமைக்கும் கல்வியின் ஆற்றல் மற்றும் பிள்ளையொன்றின் எதிர்காலத்தை உருவாக்குவதில் அதன் இன்றியமையாத தாக்கத்தின் மீது செலான் கார்ட்ஸ் மனப்பூர்வமான நம்பிக்கை கொண்டுள்ளது.

வெறுமனே ஒரு நிதித்தீர்வாக மட்டுமன்றி, ஒவ்வொரு பிள்ளையின் கனவுகளுக்குமான எமது மெய்யான அர்ப்பணிப்பின் ஓர் உருவகமாக இந்த 0% வட்டி இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகம் செய்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்“ என்று தெரிவித்தார்.